யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை,மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | ஐரோப்பிய வரலாறு | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி - I

❖ 1 - 10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்களுள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

1) 1) டன்யூப் 2) றைன் 3) ஸைன்
4) சட்லெப் 5) எல்ப் (.............)

2) 1) 8ம் ஹென்றி 2) எலிசபெத் 3) 4ம் ஹென்றி
4) 6ம் எட்வேட் 5) 7ம் ஹென்றி (.............)

3) 1) மொண்டல்கியூ 2) ரூசோ 3) வோல்ரயர்
4) மிராபோ 5) றிச்சல்யூ (.............)

4) 1) ருமேனியா 2) டென்மார்க் 3) பல்கேரியா
4) செக்கோசெலவாக்கியா 5) யூகோஸ்சிலோவாக்கியா (.............)

5) 1) அலெக்ஸ்சாண்டர் ரூப்செக் 2) ட்ரிக்விலி 3) டாக்ஹமர்ஸ் ஜோல்ட்
4) ஊதானிற் 5) பெரஸ்டி குவெலர் (.............)

6) 1) கொத் 2) பிராங் 3) மொங்கோலியன்
4) ஹன் 5) அங்லோ சாக்சன் (.............)

7) 1) லீப்சிச் யுத்தம் 2) டிரபல்சார் யுத்தம் 3) தீபகற்பப் போர்
4) சடோவாயுத்தம் 5) வாட்டசார் யுத்தம் (.............)

8) 1) ஈஜியன் 2) மால்டா 3) கோர்சிகா
4) எல்பா 5) சிசிலி (.............)

9) 1) மக்சியாஸ் 2) வலன்ஸ்ரீன் 3) மசஸ்மிலியன்
4) குஸ்ராவஸ் 5) குஹாம்வெல் (.............)

10) 1) குளோடியஸ் 2) பெரிசிலிஸ் 3) நீரோ
4) செஞ்கெல்லா 5) ஒகஸ்ரஸ் சீசர் (.............)



agaram.lk
Scanned with CamScanner

❖ 11 - 15 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒருசோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

11)
1) வெலிங்டன் பிரபு - நெப்போலியனின் படையை டிரபல்கார் போரில் தோற்கடித்தமை.
2) 14ம் சாயி - வெர்செயிஸ் மாளிகை உருவாக்கம்
3) 8ம் ஹென்றி - கத்தோலிக்கத்தின் காவலன்
4) 3ம் ஹென்றி - பாராளுமன்றத்தின் தந்தை
5) 1ம் ஹென்றி - கப்பலோட்டும் காவலன்

(.............)

12)
1) இரகசியம் - பெட்ராக்
2) தெய்வீக [illegible]வியல் - தாந்தே
3) இளவரசன் - மாக்கியவலி
4) தாள்கபிடல் - கால்மாக்ஸ்
5) தேசங்களின் செல்வம் - அல்பிரட் மார்ஸல் (.............)

13)
1) முப்பதாண்டுப் போர் - வெஸ்பேலியா சமாதானம்
2) ஏழாண்டுப் போர் - கண்டன முறைமை
3) நெப்போலியன் போர் - வியன்னா மகாநாடு
4) 1ம் உலகமகாயுத்தம் - சர்வதேச சங்கம்
5) 1ம் உலகமகாயுத்தம் - ஐக்கியநாடுகள் சபை (.............)

14)
1) கிரேக்க நாகரிகம் - கொலோசியம் விளையாட்டு அரங்கு
2) உரோம நாகரிகம் - தலைநகர் கொன்சல்
3) கிறிஸ்தவ நாகரிகம் - மடாலய முறைமை
4) இஸ்லாமிய நாகரிகம் - இந்து அராபிய எண்
5) மினோவன் நாகரிகம் - பெருந்தெருக்கள் அமைப்பு (.............)

agaram.lk

15)
1) 5ம் சாள்ஸ் - புனித உரோமப் பேரரசு
2) றோபர்ட்டீல் - இங்கிலாந்தின் பிரதமமந்திரி
3) மெற்றர்னிச் - ஒஸ்திரியாவின் சான்ஸலர்
4) வெலிங்டன் பிரபு - பிரான்சின் இராணுவ அதிகாரி
5) முசோலினி - இத்தாலியின் பிரதமமந்திரி (.............)

❖ 16 - 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் சில பெயர்கள் /கூற்றுக்கள்/திகதிகள் என்பவற்றின் தொகுதிகள் X,Y நிரல்களில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் /கூற்றுக்கள்/திகதிகள் X நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோவொரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் சரியான தொடர் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரலில் உள்ளவற்றை X நிரலில் உள்ளவற்றுக்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள 5 சேர்மானங்களுள் ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

16)

| X | Y |
|---|---|
| i. 30 ஆண்டுப் போர் | A - 14 ஆம் லூயி |
| ii. ராணியின் போர் | B - 15 ஆம் லூயி |
| iii. ஏழாண்டுப் போர் | C - 3ஆம் நெப்போலியன் |
| iv. சிரிமியப்போர் | D - 4ஆம் கிறிஸ்டியன் |
| v. 1ஆம் உலகப்போர் | E - 2ம் வில்லியம் கைசர் |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DBAEC 5) DEBAC (...........)



Scanned with CamScanner

17)

| X | | Y |
|---|---|---|
| i. | மேரி ரியூடர் | A - எட்டாம் ஹென்றி |
| ii. | இஸபெல்லா | B - நான்காம் ஹென்றி |
| iii. | ஆன் போலின் | C - பதினாறாம் லூயி |
| iv. | மேரி அன்ரனொயிற்றா | D - இரண்டாம் பிலிப்பு |
| v. | மாரிடி மெடிசி | E - பேர்டினனட் |

1) DEBCA 2) DBACE 3) DABEC 4) DEACB 5) DEACB (............)

18)

| X | | Y |
|---|---|---|
| i. | முசோலினி | A - புதிய செம்படை |
| ii. | மசினி | B - இரத்தமும் இரும்பும் |
| iii. | கரிபால்டி | C - செஞ்சடை இராணுவம் |
| iv. | பிஸ்மார்க் | D - கருஞ்சட்டை இராணுவம் |
| v. | லெனின் | E - இணை இத்தாலி |

1) DECBA 2) DACBE 3) DEACB 4) DEABC 5) DABCE (............)

19)

| X | | Y |
|---|---|---|
| i. | பேடினனட் | A - இத்தாலி ஐக்கியம் |
| ii. | பிஸ்மார்க் | B - பிரான்சிய ஐக்கியம் |
| iii. | கபூர் | C - இங்கிலாந்து ஐக்கியம் |
| iv. | 1ம் பிரான்சிஸ் | D - ஸ்பானிய ஐக்கியம் |
| v. | 7ம் ஹென்றி | E - ஜேர்மனி ஐக்கியம் |

1) DACBE 2) DEACB 3) DAECB 4) DBACE 5) DEABC (............)

20)

| X | | Y |
|---|---|---|
| i. | அமெரிக்க சுதந்திரப் போர் | A - மிராபோ |
| ii. | பிரான்சியப் புரட்சி | B - கபூர் |
| iii. | இத்தாலி ஐக்கியம் | C - ஹிட்லர் |
| iv. | போல்சவிக் புரட்சி | D - ஜோர்ச் வாசிங்டன் |
| v. | நாசிசவாதம் | E - வி. ஐ. லெனின் |

1) DBACE 2) DABEC 3) DACBE 4) DEACB 5) DBECA (............)

21)

| X | | Y |
|---|---|---|
| i. | அச்சு இயந்திரம் | A - தோமஸ்பெல் |
| ii. | தொலைகாட்டி | B - ஜேம்ஸ்வாட் |
| iii. | தையல் இயந்திரம் | C - கலிலியோகலிலி |
| iv. | சிலிண்டர் அச்சிடல் முறை | D - ஜோன் கூட்டன் பேர்க் |
| v. | புகைபோக்கிக் கப்பல் | E - எலியஸ் ஹர்வே |

1) DECAB 2) CEABD 3) DAECB 4) AEBDC 5) EDCAB (............)

22)

| X | | Y |
|---|---|---|
| i. | நியூயோர்க் போர் | A - வோஷிங்டன் ஆங்கிலப்படையை வெல்லுதல் |
| ii. | நியூஜெர்சி போர் | B - நியூஜெர்சி கைப்பற்றப்படல் |
| iii. | திரென்சன் போர் | C - சுதந்திரப்போர் முடிவுபெறல் |
| iv. | சாள்ஸ்ரன் போர் | D - வோஷிங்ரன் தோற்கடித்தல் |
| v. | போர்ச்ரவுண் போர் | E - சாள்ஸ்ரன் கடற்தளம் கைப்பற்றப்படல் |

1) DEACB 2) DECAB 3) DEBCA 4) DBAEC 5) DBCEA (............)



agaram.lk

Scanned with CamScanner

23)

| X | | Y |
|---|---|---|
| i. | நவிகேசன் சட்டம் | A - 1688 |
| ii. | முத்திரைச்சட்டம் | B - 1765 |
| iii. | பொஸ்ரன் தேநீர் விருந்து | C - 1917 |
| iv. | ரஸ்யபாண் கலகம் | D - 1651 |
| v. | மகிமைப் புரட்சி | E - 1771 |

1) DECBA 2) DCEAB 3) DBECA 4) DBAEC 5) DEBAC (............)

24)

| X | | Y |
|---|---|---|
| i. | நிலமானிய முறை | A - பிறள்நெறியறுப்பு |
| ii. | முதலாளித்துவம் | B - ஐரோப்பாவில் |
| iii. | மறுமலர்ச்சி | C - தனிமைவாதம் |
| iv. | எதிர்சீர்திருத்தம் | D - நிந்தகம் முறைமை |
| v. | முப்பதாண்டுப் போர் | E - மானிடப்பண்டு |

1) DECBA 2) DCEAB 3) DABCE 4) DBAEC 5) DEBAC (............)

25)

| X | | Y |
|---|---|---|
| i. | சவோய் | A - பீட்மன்ற் |
| ii. | அல்சேய்ஸ் | B - லொறைன் |
| iii. | சாடினியா | C - பக்தாத் |
| iv. | பேர்ளின் | D - நீஸ் |
| v. | ஷெல்ஸ்விச் | E - ஹோல்ஸ்ரைன் |

1) DBAEC 2) DECBA 3) DCEAB 4) DABCE 5) DBACE (............)

❖ 26 - 30 வரையுள்ள எல்லா வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு மாற்றுவிடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடைகள் ஆகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

(A) யும் (B) யும் மட்டும் சரியாயின் 1 எனவும்,(B) யும் (C) யும் மட்டும் சரியாயின் 2 எனவும்

(C) யும் (D) யும் மட்டும் சரியாயின் 3 எனவும்,(A) யும் (C) யும் மட்டும் சரியாயின் 4 எனவும் ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

அறிவுறுத்தல்களின் சுருக்கம்

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| (A)யும் (B)யும் மட்டும் சரி | (B)யும் (C)யும் மட்டும் சரி | (C)யும் (D)யும் மட்டும் சரி | (A)யும் (C)யும் மட்டும் சரி | ஒரு விடை மட்டும் அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரி |

26) நெப்போலியன் தோற்கடிக்கப்பட்ட போர்கள்

A) எகிப்தியப்போர் B) சிரிமியப்போர்

C) வாட்டசார் போர் D) திரபல்சார் போர்

(.............)

27) கீழ்வருவனவற்றுள் ஜேர்மனியை இணைப்பதற்குச் சாதகமாக அமைந்த காரணங்கள் யாவை?

A) ஒஸ்திரியா வழங்கிய ஆதரவு

B) சொல்பரைன்

C) பிஸ்மாக்கினுடைய இராஜதந்திர ஆற்றல்

D) அல்சேஸ் லொறைன் பிரதேசத்தை ஜேர்மனிக்கு வழங்க உடன்பட்டமை (.............)



agaram.lk

Scanned with CamScanner

28) முதலாம் உலகப்போரின் விளைவுகள்

A) வியன்னா தீர்வு B) போல்சவிக் கட்சி

C) வெர்சையிஸ் ஒப்பந்தம் D) சர்வதேச சங்கம் தாபிக்கப்பட்டமை (.............)

29) பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணம்

A) ஸ்ரேட்ஜெனரல் கூட்டப்பட்டமை

B) வரம்பில்லா முடியாட்சி

C) போட்டி இயக்கங்கள் தோற்றம்

D) அரசர்களின் பலவீனம் (.............)

30) கீழ்வரும் பட்டியலில் உள்ள விடயங்களிலிருந்து நெப்போலியனின் உள்நாட்டு சீர்திருத்தத்தை இனம் காண்க.

A) சட்டத்தொகுப்பின் முன்னேற்றம் B) பாப்பரசருடன் சமய ஒப்பந்தம்

C) ரஸ்யா மீது படையெடுப்பு D) கண்டமுறைப் பிரகடனம் (.............)

❖ 31 - 35 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவ்வைந்து விடயங்களில் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாது. அப்பொருந்தாததைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

31) இங்கிலாந்தின் பாராளுமன்றம்

1) பெரிய பட்டயம் பாராளுமன்ற உருவாக்கத்தின் ஆரம்ப கட்டத்தைக் குறிக்கின்றது.
2) தனது சமய நடவடிக்கைகளுக்கு 8ம் ஜென்றி பாராளுமன்றத்தின் உடன்படிக்கையைப் பெற்றுக்கொண்டான்.
3) ஸ்டுவர்ட் மன்னர்களுக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் தகராறுகள் ஏற்பட்டன.
4) 1688 இல் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது.
5) ஹனோபரிய அரசர் காலத்தில் பிரதம மந்திரியின் பதவி வலுவான அதிகாரத்தைப் பெற்றது. (.............)

32) ஜேர்மனி ஐக்கியப்படுத்தப்பட்டமை

1) பிரஸ்யாவினுடைய தலைமையில் சொல்வரைன் உருவாக்கப்பட்டது.
2) ஒஸ்ரியாவிற்கும் சாடினியாவிற்கும் இடையிலான போர்.
3) ஷினெஸ்விக் - ஹொல்ஸ்ரைன் தொடர்பாக டென்மார்க்கை ஒஸ்ரியாவும் பிரஸ்யாவும் தோற்கடித்தமை
4) ஒஸ்ரியாவுக்கும் பிரஸ்யாவிற்கும் இடையிலான போர்
5) பிரெஞ்சுக்கும் பிரஸ்யாவிற்கும் இடையிலான போர் (.............)

33) 1848 புரட்சிகள்

1) புரட்சி பாரிசில் ஆரம்பமானது .
2) ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் புரட்சி ஏற்பட்டது.
3) ரஸ்யாவிலும் புரட்சி ஏற்பட்டது.
4) பிரெஞ்சில் லூயி பிலிப் பதவி துறந்தார்.
5) மெற்றரிக் பதவியிலிருந்து விலகினார். (.............)

34) 1917 இன் போல்சவிச் புரட்சி

1) ஹிட்லர் 2) லெனின் 3) ட்ரொஸ்கி

4) ஸ்ராலின் 5) புகாரின் (.............)

35) முதலாம் உலகப்போரின் பின் எழுதப்பட்ட உடன்படிக்கைகள்

1) வேர்செயிஸ் உடன்படிக்கை 2) சாந்த ஜெமெயின் ஒப்பந்தம்

3) நியூலி உடன்படிக்கை 4) ரியனோன் உடன்படிக்கை

5) பேர்ளின் உடன்படிக்கை (.............)



agaram.lk
Scanned with CamScanner

❖ 36 - 40 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச்சோடிக்குக் கீழேயுள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பவற்றில் மிகப் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | சரியானது |
| 2 | சரியானது | பிழையானது |
| 3: | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதாயிருப்பதோடு 1ம் கூற்றினை நன்றாக விளக்குவதுமாகும். |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 36) | ஜேர்மனியிலே சமயச் சீர்திருத்தத்திற்கு உல்றிச் சுவிங்கிலி தலைமை தாங்கினார். | இங்கிலாந்தில் சமயச் சீர்திருத்தம் 8ம் ஹென்றியினால் ஆரம்பிக்கப்பட்டது. (..........) |
| 37) | மறுமலர்ச்சிக் காலத்தில் இத்தாலியில் லொரன்சோமெடிசி கலைஞர்களுக்கு அதிகம் ஆதரவு வழங்கினார். | கொலம்பஸ் உலகினைச் சுற்றிப் பிரயாணஞ்செய்து பூமி உருண்டையானது என நிரூபித்தார். (..........) |
| 38) | கிரேக்க நகர அரசபதவி மிகப்பெரிய நகர அரசு ஸ்பாட்டா ஆகும். | கிறிஸ்தவ சமயத்தைத் தழுவிய கொன்ஸ்ரன்னிதன் பேரரசன் அதற்கு அனுசரணை வழங்கினான். (..........) |
| 39) | அராபியரிடம் உயர் தரத்திலான கல்வி முறை ஒன்று பேணப்பட்டு வந்துள்ளது. | பக்தாத், கெய்ரோ, டமஸ்கஸ் தொடரடோவா, செமிது. பாசிலோனா பல்கலைக்கழகங்கள் அராபியர்களின் ஒழுங்கமைந்த கல்விமுறைக்கான சான்றாகும். (..........) |
| 40) | இங்கிலாந்தின் பாராளுமன்றம் மக்கள் பிரதிநிதிகள் நிறுவனமாக விளங்கியது. | பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெறாமல் மன்னன் நிரந்தரப் போர்ப்படை வைத்திருக்க முடியாது. (..........) |

agaram.lk



Scanned with CamScanner

## பகுதி - II

முதலாம் வினா கட்டாயமானது. ஏனைய வினாக்களில் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

1. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஐரோப்பியப் புறவுருப் படத்தில் பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிட்டு அவற்றுள் நீர் விரும்பும் இரண்டிற்குச் சுருக்கமாக வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

   i. லண்டன்
   ii. பெல்ஜியம்
   iii. பிரனிஸ்
   iv. போர்த்துக்கல்
   v. மத்தியதரைக்கடல்
   vi. கீல்கால்வாய்
   vii. இத்தாலி
   viii. சிசிலி

(10 + 8 = 18 புள்ளிகள்)

2.
   i. உரோம நகரத்தின் அமைவிடத்தைத் தெளிவாகக் குறிப்பிடுக.
   ii. உரோமப் பேரரசின் ஆட்சிக்காலங்கள் மூன்றையும் குறிப்பிடுக.
   iii. சமூக அடிப்படையில் உரோமப் பேரரசில் காணப்பட்ட இரு பெரும் பிரிவுகளையும் தருக.

(2+3+2+7புள்ளிகள்)

3. நவீன ஐரோப்பாவின் தோற்றத்திற்கு மறுமலர்ச்சி அத்திவாரமிட்டது.
   i. மறுமலர்ச்சி தோற்றம் பெற்ற நாட்டைக் குறிப்பிடுக.
   ii. மறுமலர்ச்சி என்ற பதத்தை ஐரோப்பிய வரலாற்று ரீதியில் குறிப்பிடுக.
   iii. மறுமலர்ச்சி தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் யாவை?
   iv. நாடுகாண் பயணங்கள் மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தமையை ஆதாரபூர்வமாக ஆராய்க.

(1+3+5+5புள்ளிகள்)

4.
   i. 1555 ஆம் ஆண்டு ஒக்ஸ் போர்க் சம்மேளனத்தின் தீர்மானங்கள் யாவை?
   ii. முப்பதாண்டுப் போருக்கான காரணங்கள் யாவை?
   iii. முப்பதாண்டுப் போரின் விளைவுகள் யாவை?

(3+5+6புள்ளிகள்)

5. நெப்போலியன் பொனாபாட் ஐரோப்பாவின் தலைசிறந்த அரசியல் ஞானிகளில் ஒருவனாகக் கொள்ளப்படுகிறான்.
   i. நெப்போலியன் பொனாபாட் பிறந்த இடத்தைக் குறிப்பிடுக.
   ii. பிரான்சின் சக்கரவர்த்தியாகும் முன்பு நெப்போலியனின் தலைமையில் நடைபெற்ற அயல்நாட்டுப் படையெடுப்புக்கள் எவை?
   iii. சக்கரவர்த்தியாவதற்கு முன்பு நெப்போலியன் பெற்றிருந்த முக்கியமான அரசியல் பதவிகள் எவை?
   iv. நெப்போலியன் கடைப்பிடித்த உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையில் அவனை ஒரு தலைசிறந்த அரசியல் மேதையாகக் கொள்ளலாமா என்பதனைப் பரிசீலனை செய்க.

(1+2+3+8புள்ளிகள்)

6. கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சுருக்கமாகக் குறிப்புக்கள் எழுதுக.
   i. மார்டின்லூதர்
   ii. இங்கிலாந்தில் ஏற்பட்ட 1688 ஆம் ஆண்டு புகழ்மிக்க புரட்சி
   iii. கைத்தொழிற்புரட்சி
   iv. மானியமுறை



agaram.lk
Scanned with CamScanner

7. 1815 - 1848 ஆகிய காலப்பகுதியில் இத்தாலியை ஐக்கியப்படுத்துவதற்கு மேற்கொண்ட முயற்சிகளை விபரித்து அவை தோல்வியடைந்தமைக்கான காரணங்களை விளக்குக.

(14புள்ளிகள்)

8.

i. 1917 இல் ரஸ்யப்புரட்சி ஏற்படுவதற்கு வழிவகுத்த காரணிகளைப் பரிசீலனை செய்க.

ii. அப்புரட்சியின் விளைவுகளை ஆராய்க.

(6+1புள்ளிகள்)

9.

i. முதலாம் உலகப்போர் நடைபெற்ற போது ஜேர்மனியின் சக்கரவர்த்தியாக இருந்தவர் யார்?


ii. முதலாம் உலகப்போருக்கு ஏதுவாயிருந்த உடனடிக்காரணம் யாது?

iii. சர்வதேச சங்கத்தின் சபையில் நிரந்தர உறுப்புரிமை பெற்ற நாடுகள் இரண்டின் பெயர்களைக் குறிப்பிடுக.

iv. சர்வதேச சங்கத்தின் பிரதானமான குறிக்கோள்கள் யாவை?

v. இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதை சர்வதேச சங்கத்தினால் தடுப்பதற்கு இயலாமையினைப் பற்றிக் குறிப்பிடுக.

(1+2+3+7புள்ளிகள்)




agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

| ஐரோப்பிய வரலாறு | புள்ளித்திட்டம் | தரம் :- 13(2016) |
|---|---|---|

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 4 | 11) | 4 | 21) | 1 | 31) | 4 |
| 02) | 3 | 12) | 5 | 22) | 4 | 32) | 2 |
| 03) | 5 | 13) | 2 | 23) | 3 | 33) | 3 |
| 04) | 2 | 14) | 1 | 24) | 2 | 34) | 1 |
| 05) | 1 | 15) | 4 | 25) | 5 | 35) | 5 |
| 06) | 3 | 16) | 3 | 26) | 5 | 36) | 4 |
| 07) | 4 | 17) | 4 | 27) | 2 | 37) | 1 |
| 08) | 1 | 18) | 1 | 28) | 3 | 38) | 2 |
| 09) | 5 | 19) | 5 | 29) | 5 | 39) | 5 |
| 10) | 1 | 20) | 2 | 30) | 1 | 40) | 2 |

## பகுதி - II

1. படவேலை

2. (i) மத்தியதரைக் கடலில் இத்தாலியத் தீபகற்பத்தின் மத்தியில் ரைபர் நதிக்கரையோரமாக அமைந்துள்ளது.
   (ii) மன்னராட்சிக்காலம், குடியரசுக்காலம், பேரரசுக்காலம்
   (iii) பற்றியன்ஸ், பிலிப்பைன்ஸ்
   (iv) ஐரோப்பிய அரசியல் சமூக அமைப்பிற்கு அத்திவாரம் இட்டமை, சட்டத்துறை, கட்டிட பொறியியல் துறை, கிறிஸ்தவ சமயத்தைத் தனது பேரரசு பூராகவும் பரப்பியமை.

agaram.lk

3. (i) இத்தாலி
   (ii) கிரேக்க உரோம காலத்தில் சிறப்புற்றிருந்த ஐரோப்பிய மத்திய காலத்தில் இருந்து 15ஆம் நூற்றாண்டில் மீண்டும் எழுச்சியடைந்தமை.
   (iii) சிலுவைப்போர், மானியமுறை வீழ்ச்சி, தேசிய அரசுகளின் தோற்றம், நாடுகாண் பயணங்கள், வர்த்தக வளர்ச்சி, நகரங்களின் தோற்றம், சமயச் சீர்திருத்தம்
   (iv) கொன்ஸ்தான்திநோபிள் கைப்பற்றப்பட்டமை, வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை, ஐரோப்பிய அரசு தோற்றம், நாடுகள் பிரசித்தியடைந்தமை, கடற்படை, கடற்கலங்கள் பெருகியமை.

4. (i) புரட்டஸ்தாந்து சமயத்தை அங்கீகரித்தமை, சுவிங்சிலியம் - கல்வினியம் என்பவற்றை மறுத்தமை, மக்களிடம் பெற்றுக்கொண்ட நிலங்களை அவர்களிடம் ஒப்படைத்தமை.
   (ii) சமயக் காரணங்கள் : ஒக்ஸ்பேர்க் சமாதான உடன்படிக்கைக் குறைபாடுகள், திருச்சபையிடமுள்ள நிலபுலங்கள் தொடர்பான பிரச்சினைகள், சமயத்தைப் பின்பற்றுதல் தொடர்பான பிரச்சினைகள், ஜேர்மனியில் தமது அதிகாரத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கு உரோமப் பேரரசன் முயலுதல், தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு செயற்பட்ட ஜேர்மனியப் பிரதேச சிற்றரசர்கள் அதனை எதிர்த்தல், இதனால் இரு சாராருக்கும் இடையில் ஏற்பட்ட பகைமை, ஹிட்லர் பேர்க் பூர்வன் அரச வம்சத்தவரிடையே நிலவிய போட்டிகள், சுவீடன் பால்டிக் கடற்பிரதேசத்தில் வர்த்தக ஆதிக்கம் பெற முயன்றமை.



Scanned with CamScanner

அரசியல் காரணிகள்

உரோமப் பேரரசுக்கும் ஜேர்மன் இளவரசர்களுக்கும் இடையே ஏற்பட்ட அதிகாரம் தொடர்பாக முரண்பாடுகளும் மோதல்களும், ஐரோப்பாவில் இருந்த தேசிய அரசுகளுக்கு இடையிலான போட்டி

(iii) விளைவுகள் : சமயமோதல் முடிவுக்கு வந்தது, வெஸ்ற் போலியா உடன்படிக்கை ஏற்படல், உரோமப் பேரரசின் தலைமையிலான கத்தோலிக்கர் போரில் தோல்வியடைந்தமை, பிரான்சின் தலைமையிலான புரட்டஸ்தாந்து வெற்றி பெறல், ஜேர்மனியின் சிற்றரசர்கள் சுதந்திரமாக செயற்பட வழி ஏற்படல், தேசிய அரசாக ஜேர்மனி ஒன்றிணைய முடியவில்லை. அவ்வாறு இணைய நீண்டகாலம் ஏற்பட்டது, ஹப்ஸ்பேர்க் அரச பரம்பரையின் அதிகாரத்தை ஒழிக்கும் நோக்குடன் போரில் ஈடுபட்ட பிரான்ஸ் அதில் வெற்றிகண்டது. அத்தோடு பிரான்ஸ் ஐரோப்பாவில் முதன்மையான இடத்தைப் பெற்றது, பால்டிக் கடற் பிரதேசத்தில் வர்த்தகத்தில் ஈடுபடத் தருணம் பார்த்திருந்த சுவீடன் நோக்கம் நிறைவேறியது, உரோமப் பேரரசின் அதிகாரமும் முக்கியத்துவமும் குறைவடைதல், ஜேர்மனியின் பௌதீக வளங்களும் உயிர்களும் சேதம் ஏற்படல், சுவிற்சலாந்து, நெதர்லாந்து சுதந்திர அரசுகளாக ஆக்கப்படல்.

5. (i) கோர்சிக்கா தீவு

(ii) இத்தாலியை ஆக்கிரமித்தல், எகிப்தை ஆக்கிரமித்தல்

(iii) மூன்று கொன்சல்களில் பிரதான கொன்சலராகப் பதவி வகித்தமை

(iv) பலரது ஆதிக்கத்தின் கீழ் இருந்த நிறுவனங்களைக் கலைத்து பிரான்சியப் புரட்சியின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்ற குறிக்கோள்கள் பிரான்சிய சமுதாயத்தில் பல தாக்கங்களை ஏற்படுத்தியது. பலம் வாய்ந்த மத்திய அரசை ஏற்படுத்தி நிர்வாகத்தை ஒருமுகப்படுத்தல், பாப்பரசருடன் இணக்கத்தை ஏற்படுத்தல். புரட்சியின் போது கத்தோலிக்கத் திருச்சபை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல், நெப்போலியனின் நீதித் தொகுப்பு, கல்விச் சீர்திருத்தங்கள், பொருளாதாரத்தைப் பலப்படுத்தல், வெளிநாட்டுக் கொள்கை, பிரான்சை மையமாகக் கொண்டபேரரசைக் கட்டியெழுப்ப முயலுதல், தனது ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களில் அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கையை மேற்கொள்ளல், நெப்போலியனின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை நோக்கின் அவன் ஐரோப்பாவில் இருந்ததலை சிறந்த அரசியல் மேதை எனக் கொள்ளலாம்.

6. (i) மார்டின் லூதர் : 1455 ஜேர்மனியில் தியூரிஞ்ஞா எனும் இடத்தில் பிறந்தார். சமயத்துடன் ஈடுபாடு கொண்டவர். ஒருபோர்ட் பல்கலைக்கழகத்தில் சட்டம் பயின்ற போதிலும் பின்னர் இறையியல் மெய்யியல் பயின்றார். 1505 இல் புனித அகஸ்ரின் சபையில் சேர்ந்து குருவான இவர் புனித அகஸ்ரின் நூல்களைக் கற்றார். 1511 இல் விற்றன்பேர்க் பல்கலைக்கழகத்தில் இறையியல் பேராசிரியராக நியமனம் பெறல் வேதாகமம் பற்றி ஆழமாகக் கற்றல். 1517 இல் ஜோன்ரெற்சல் பாவமன்னிப்புச் சீட்டு விற்றபோது லூதர் அதற்குத் தன் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்தார். நியாயங்களைக் காட்டி விற்றன்பேர்க் கோயில் கதவில் அறக்கையிட்ட லூதரின் கொள்கைகள் புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தத்திற்கு வழிகோலியது. பாப்பரசர் லூதரை திருச்சபையிலிருந்து நீக்கினார். பரிசுத்த உரோமப் பேரரசு லூதருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல், உரோமப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெறுவதற்கு முயன்ற ஜேர்மன் இளவரசர்களின் உதவி லூதருக்குக் கிடைத்தது. இதனால் லூதரின் புரட்டஸ்தாந்து மதம் வளர்ச்சியுற்றது. 1555 ஆம் ஆண்டு ஒக்டோபர் நடைபெற்ற மகாநாட்டில் லூதர் வாதம் மதமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சமயச் சீர்திருத்தத்திற்கு உழைத்தார்.



agaram.lk
Scanned with CamScanner

(ii) இங்கிலாந்தில் ஏற்பட்ட 1688 ஆம் ஆண்டு புகழ்மிக்க புரட்சி :
அரசனுக்கும் பாராளுமன்றத்திற்கும் அதிகாரம் தொடர்பாக ஏற்பட்ட தகராறு புரட்சி வரை செல்லல், ஸ்டுவட் வம்ச அரசர்கள் அரசனின் அதிகாரத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் பாராளுமன்றத்தைப் புறக்கணிப்பதற்கும் முயன்றமை, ஸ்டுவர்ட் அரசர்கள் கத்தோலிக்க மதத்தவர்களாக இருந்தமையும். பாராளுமன்றத்தோர் புரட்டஸ்தாந்தராக இருந்தமையும் இரு சாரரது மோதலுக்கு முக்கிய காரணங்களாகியமை.
பரவல் : 1642 இல் சிவில் யுத்தம் ஆரம்பமாதல், 1649 இல் Iம் சாள்ஸ் மன்னன் சிரச்சேதம் செய்யப்பட்டமை, குறொம் வெல்லின் தலைமையில் கூட்டரசங்கம் ஏற்படல், 1658 இல் மீண்டும் மன்னராட்சி ஏற்படல், 2ம் சாள்ஸ் அரசனாதல் அவன் தன் எண்ணப்படி ஆட்சி செய்ய முயன்றமை, 1685 ஆம் ஆண்டில் 2ம் ஜேம்ஸ் அரசனாதல் அவனும் தன் எண்ணப்படி ஆட்சி செய்தல், 1688 இல் புரட்சி ஆரம்பம் IIம் ஜேம்ஸ் நாட்டைவிட்டு ஓடுதல், ஒரேஞ்சின் வில்லியமும் மேரியும் ஆட்சிக்குவரல்

**விளைவுகள் :**

பாராளுமன்றம் வெற்றி பெறல். அரசனது அதிகாரம் மட்டுப்படுத்தப்படல். 1689 இல் உரிமை தொடர்பான வெளியீடு - அரசனுக்கு வரி வசூலிக்கவும் படை வைத்திருக்கவும் பாராளுமன்றத்தின் அமைதிபெற வேண்டும். பாராளுமன்றத்தால் அரசன் ஆட்சிப்பீடத்திற்கு நியமிக்கப்படல், இங்கிலாந்தில் புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவரே சிம்மாசனத்திற்கு உரிமையுடையவராவார்.

(iii) கிரோக்க நகர அரசுகள் :
நகரை மையமாகக் கொண்ட அரசியல் அலகு. முக்கிய நகர அரசுகள் எதென்ஸ் தீட்ஸ், ஸ்பாட்டா, மிலேட்டஸ். நில அளவிலும் மக்கள் தொகையிலும் சிறிய அரசாக இருந்தமை. எனினும் நிலஅளவிலும் பூர்வீக மக்கள் தொகையிலும் பல்வேறுபட்டதாக இருந்தமை. ஸ்பாட்டா 3000 சதுர மைல்களுக்கு மேற்பட்டது. எதென்ஸ் 1060 சதுர மைல்களைக் கொண்டது. இவைகளில் பலவிதமான ஆட்சிமுறை இருந்தது. அரசியல் ஒன்றிப்பு இல்லாமை. நகர ஆட்சியை மையமாகக் கொண்டு கிரேக்கப் பண்பாடு வளர்ச்சி அடைந்தமை.

agaram.lk

(iv) கைத்தொழிற்புரட்சி :
விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரமுறை மாற்றமடைந்து இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம் அனைத்துத் துறைகளிலும் புதியமாற்றத்தைக் கண்டமையே கைத்தொழிற்புரட்சி ஆகும். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இங்கிலாந்தில் ஆரம்பமான இப்புரட்சி 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா எங்கும் பரவியது. கைத்தொழிற்புரட்சி இங்கிலாந்தில் ஆரம்பமாவதற்கான பின்னணி அக்காலத்தில் கைத்தொழிலில் ஏற்பட்ட பிரதான மாற்றங்கள் கைத்தொழில் புரட்சியின் அரசியல் சமூக பொருளாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி எழுதப்படல்.

(v) மத்தியகாலத்தில் ஐரோப்பாவில் நிலவிய பொருளாதார சமூக அரசியல் முறை மானியமுறை எனப்படும்.

**மானியமுறை ஏற்படுவதற்கான காரணங்கள் :**
உரோமப் பேரரசின் இறுதிக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்கள் பாரிய விவசாயப் பண்ணைகள் தோன்றுதல். மிலேச்சர்களின் ஆக்கிரமிப்பின் பின்னர் ஐரோப்பாவில் ஏற்பட்ட குழப்பமான பாதுகாப்பற்ற அரசியல் சூழல் மானியமுறையின் பிரதான இயல்புகள், விவசாயத்தை மையமாகக் கொண்ட பொருளாதாரம் சுயதேவைப் பொருளாதாரம். பணப்புழக்கமும் வர்த்தகமும் மட்டுப்படுத்தப்பட்டமை, சமுதாயம் அரசன் பிரபுக்கள் குருமார் உட்பட சலுகை பெற்ற வகுப்புக்களிலும் சலுகையற்ற வகுப்புக் களிலும் தோன்றுதல்., சமுதாய நிலைபிறப்பின் மூலம் தீர்மானிக்கப்படல், நிலத்தை அடிப்படையாகக் கொண்ட சேவைத் தொடர்பு அரசியல் ரீதியாக அதிகாரங்கள் குவிந்த முடியாட்சி மானியமுறையின் வீழ்ச்சி.



Scanned with CamScanner

7. 1815 ஆம் ஆண்டு வியன்னா மகாநாட்டில் இத்தாலி பிரிக்கப்பட்டிருந்தமை, காபனாரி இயக்கம் மசினியின் இளம் இத்தாலியின் இயக்கம் என்பன இத்தாலியை இணைக்கும் பொருட்டுப் பலமுறைகளைப் பின்பற்றுதல். மக்களின் தேசிய உணர்வும் ஒற்றுமையும் வளர்வதற்கு நடவடிக்கை எடுத்தல், இத்தாலியை ஐக்கியப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, 1820 இல் காபனாரி இயக்கத்தின் தலைமையில் நேபிள்ஸில் பேர்டினற்கு எதிராக கிளர்ச்சியை மேற்கொண்டமை, 1821 இல் காபனாரி இயக்கத்தினால் ஆஸ்திரிய ஆட்சிக்கு எதிராக லொம்பாடி மக்கள் கிளர்த் தெழுதல், 1830 ஆம் ஆண்டு பர்மா, மொடீனா, டாஸ்கனி அரசுகளின் மக்கள் கிளர்ச்சி செய்தல், 1833 ஆம் ஆண்டு சுவிர்சலாந்தில் இருந்த மசினி மன்னன் சாள்ஸ் அப்பருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார் மக்களைத் தூண்டுதல், 1848 ஆம் ஆண்டு சிசிலித் தீவுமக்கள் நேப்பிள்சில் மன்னன் 2ஆம் பேர்டினற்குஎதிராகக் கிளர்ச்சி செய்தல், லொம்பாடிமிலான போன்ற இடங்களில் கலகம் ஏற்படல், மசினி பாப்பரசருடன் உரிய பிரதேசங்களில் குடியரசைப் பிரகடனப்படுத்தல்,

**தோல்விக்கானகாரணங்கள் :**
இத்தாலிய மக்களிடையே ஒற்றுமையின்மை, மக்களிடையே தேசிய உணர்வின்மை, இத்தாலிய அரசுகளில் பல வெளிநாட்டவரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தமை, சிறப்பாக ஆஸ்திரிய ஆதிக்கத்தைக் குறிப்பிடலாம். 1820 இல் கிளர்சி தோல்வி யடைந்தமை. மன்னன் 2ம் பேர்டினன்ட் வியன்னா மகாநாட்டினரின் உதவியுடன் காபனாரி இயக்கத்தை அடக்குதல், 1830 ஆம் ஆண்டு கலகமும் ஆஸ்திரியப் படையைக் கண்டு அடக்கப்பட்டமை, பாப்பரசரின் தலையீடு - 1848 ஆம் ஆண்டு கிளர்ச்சி ஆஸ்திரியப் படையினரை முறியடிக்கப்பட்டது.

8. (i) ரஸ்யாவில் நிலவியஅரசியல் சமூக பொருளாதார நிலைமையின் பலவீனம், 2ஆம் அலெக்சாண்டர் மன்னனின் சீர்திருத்தங்களும் அவற்றின் முடிவின்மையும், கம்யூனிஸ்ட் கட்சியின் எழுச்சி. 1905ஆம் ஆண்டு ரஸ்ய யுத்தத்தில் ரஸ்யா தோற்கடிக்கப்பட்டது. வெல்வின் டிரொட்ஸ்கி போன்ற சிறந்த தலைவர்களின் தலைமைத்துவம், 1914 ஆம் உலகமகா யுத்தத்தில் பங்குகொண்ட ரஸ்யா ஜேர்மனியால் தோற்கடிக்கப்படல், 1917ஆம் ஆண்டளவில் சமாதான உணர்வு, நிலம் என்பன வேண்டி புரட்சி செய்யும் அளவிற்கு ரஸ்யாவின் சகலபிரிவினரும் துன்பங்களுக்குஉள்ளாகியிருத்தல்.

(ii) விளைவுகள் :
புரட்சி வெற்றியளித்தல், கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெறல், உலகில் 1வது கம்யூனிஸ்ட் ஆட்சி தோன்றுதல்.

9. (i) இரண்டாம் கைசர் வில்லியம்

(ii) ஒஸ்ரியாவின் முடிக்குரிய இளவரசன் பிரான்சிஸ் பேர்டினன்ட் அவன் மனைவி ஆகிய இருவரும் பொஸ்சியாவில் சராஜிவோ என்ற இடத்தில் கொலை செய்யப்பட்டமை.

(iii) பிரித்தானியா, பிரான்ஸ், யப்பான், ஜேர்மனி, அமெரிக்க ஐக்கியநாடுகள்

(iv) இனங்களின் சுதந்திரத்தை மதிப்பதும் நிலப்பகுதியைப் பாதுகாப்பதும், உலக சமாதானத்தைப் பேணுவது, இனங்களுக்கு இடையிலான மோதல்களை பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதானமாகத் தீர்த்தல்

(v) 1ம் உலகயுத்தம் முடிவடைந்து அதிககாலம் செல்லுமுன்னர் 2ம் உலகயுத்தம் நடைபெற்றமை, அமெரிக்க ஐக்கிய நாடு சர்வதேச சங்கத்தில் இணைய வைத்தல், சர்வதேச சங்க யாப்பில் காணப்பட்ட குறைபாடுகள் சர்வதேச சங்கத்தில் அங்கத்துவ நாடுகள் சங்கத்தின் தீர்மானங்களையும் கட்டணங்களையும் ஏற்றுக் கொள்வதற்குக் கட்டுப்படாமை, ஐரோப்பாவில் இருந்தபலம் வாய்ந்த ஆட்சியாளர் களிடையே நிலவிய போட்டி அமைதிக்குத் தடையானமை, சர்வதேச மன்றம் ஓர் உலக அமைப்பாக உருவாகவில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகள் உறுப்பினராகவில்லை. 1934 ஆண்டு வரை சோவியத் ரஸ்யாவுக்கு அங்கத்துவம் கொடுக்கப்படவில்லை. 1926 ஆம் ஆண்டு ஜேர்மனியை உறுப்பினராக்கிய போதிலும் 1933 ஆம் ஆண்டு அதுவிலகுதல். 1937 ஆண்டு இத்தாலி விலகுதல், ஆக்கிரமிப்பை மேற்கொண்ட நாடுகளைத் தண்டிக்கச் சங்கத்திற்கு அதிகாரம் இருக்கவில்லை.



agaram.lk
Scanned with CamScanner